1973 ஏப்ரல் 3]

திரு. எஸ். வடிவேல் : நமது மாநிலத்தில் பயிற்சி பெற்ற செவிலியர்கள் எத்தனை பேர் இன்னும் வேலையில்லாமல் இருக்கிருர்கள் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1972-ம் ஆண்டு டிசம்பர் முடிய, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சிக்குப் பின் வேலை தரப்பட வேண்டியவர்கள் 739 பேர். அவர்கள் அரசாங்க வேலைக்கு மட்டுமே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லை. ரெயில்வே துறையிலேயும் செல்லலாம். தொழில் துறையிலேயும்—இண்டஸ்ட்ரியல் சர்விஸ—செல்லலாம், பிரைவேட் செக்டாருக்கும் செல்லலாம், தனிப் பட்ட மருத்துவ மனைகளுக்கும் செல்லலாம், ஆர்மி சர்விசுக்கும் செல்லலாம். அவர்கள் எங்கே வேண்டுமானுலும் வேலைக்குச் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள், ஒன்றியங்களிலே உள்ள ஹெல்த் விசிட்டர் வேலையிலும் சேரலாம் என்று அனு மதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பல பேர் பல இடங்களில் வெவ் வேறு வகையான வேலைகளில் இருக்கிருர்கள்.

திரு. சு. துரைசாமி : 1972-ம் ஆண்டு ஏறத்தாழ 700 பேர் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசாங்கம் விரைவாக, 1972-ம் ஆண்டு இறுதியாக இருப்பதால், வேலையில்லாமல் இருக்கிற எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு சிறப்பு திட்டம் ஏதாவது கொண்டு வர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறை யிலேயும் அந்த அந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கேற்பவும் அந்த வளர்ச்சி வேறு எந்த வகையிலும் பாதிக்காது என்பதையும் பொறுத்துத் தான் வேலை வாய்ப்பு உருவாகும். நல்ல மருத்துவ மனைகட்ட முடியாதபொழுது, 40, 50 படுக்கை வசதிகளை அளிக்கமுடியாத பொழுது, புதிதாக 2 டாக்டர்களைப் போட முடியாதபொழுது, 4 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது.

சென்னை பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மருத்துவர்கள்

* 615. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் (GH.) "கேஷுவாலிடி" பிரிவில் அலுவல் பார்க்கும் சர்ஜிகல், மெடிக்கல் ஆகிய துறைகளைச் சார்ந்த டாக்டர் களில் ஒருவர் தாங்கள் மருத்துவம் செய்த நோயாளிகளைப் பற்றிய சாட்சியங் கள் சொல்ல நீதி மன்றங்களுக்கு செல்ல நேரிடும்போது அந்த நேரத்தில் அவர்

கள் சார்ந்துள்ள துறையைச் சார்ந்த வேறு டாக்டர் யாரேனும் அவருக்குப் பதிலாக அவர்களது பணியினைச் செய்ய அமர்த்தப்படுகின்றார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

* 616. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் M.D., M.S. போன்ற மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலே எந்த எந்த மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி, எம்.எஸ்.-க்கான வகுப்புகள் இருக்கின்றன. எத்தனை சீட்டுகள் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இருக்கிற கல்லூரிகளுடைய பெயர்களை மட்டும் நான் சொல்ல முடியும். சென்னையில் சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரையில், மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி. பொது மேல்பட்டப் படிப்பும், எம். எஸ். அறுவை சிகிச்சை மேல் பட்டப் படிப்பும் மற்றும் பல மேல்பட்டப் படிப்புக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, எம்.டி., எம். எஸ். மேல் பட்டப்படிப்புகளில் சேருவது மிகவும் கடினமாக இருக்கிறது என்று இப்பொழுது கூறப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மேல் படிப்புகளில் சேர்ந்து படிக்க ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிக்கும் முறையில், சில விதிமுறைகளைத் தளர்த்தியாவது அவர்களுக்கு வாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது ஒரு தவறான தகவல். சேருவது கடினமாக இருப்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகு தேர்ச்சி பெறுவது அதைவிடக் கடினமான காரியம். பலபேர் 7, 8 தடவை கூடத் தேர்வுக்குச் சென்றுவிட்டு, சிபார்சு செய்யக் கூடப் பார்க்கிறார்கள். ஆக, அப்படிப்பட்ட நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் திறமையுடன் படிக்க முடியாது திண்டாடுகிற நிலை அரசாங்கத்திற்கு நஷ்டம். ஆகவே, தேர்ந்தெடுக்கும்போதே, ஓரளவு திறமையானவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்கள் இவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதால், இந்தப் படிப்புக்காக வீணாகிற பொருள் நஷ்டம் குறையும்.